முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அது அரசு கட்டடத்தில்தான் இயங்குகிறது. எனவே, அரசுக் கட்டடத்தில் இயங்குகிற கடைகள்தான் அங்கே இருக்கின்றன. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறமாதிரி வாடகைக் கட்டடத்திலோ அல்லது வேறு கட்டடத்திலோ அது இயங்குமானால், அந்த நிதியில் கட்டிக்கொடுப்பதற்காக மாண்புமிகு அம்மாவுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திருமதி என். கவிதா சம்பத், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

342—

இணைப்புச் சாலை

***8886—திருமதி என். கனிதா சம்பத்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, பாக்கம்-புலிக்குறடு சாலையிலிருந்து நாகல்குப்பம் வரை இணைப்புச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புலிக்குறடு சாலையை பாக்கம் முதல் நாகல்குப்பம் வரை இணைப்புச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கவிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கவிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஹாவீரரின் பொன்மொழிகளில் கூறப்படும், தூய்மை, நீதி, நேர்மை மற்றும் பொது நலம் இவை அனைத்தும் நமது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி). யாவரும் கடவுளைக் கண்களால் காண முடியாது. ஆனால், நமக்கெல்லாம், தமிழக மக்களுக்கெல்லாம், கண்களால் காணும் தெய்வமாய் விளங்கும் நமது இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனது மதுராந்தகம் தொகுதியிலே அடங்கிய மதுராந்தகம் ஒன்றியத்திற்குட்பட்ட தேத்துப்பாக்கம், வசம்பலாடி, கூழமங்கலம், புலிபுரக்கோட்டை வரை ஊராட்சி சாலை உள்ளது. அதன் பிறகு நெடுஞ்சாலைத் துறையின் சாலை உள்ளது. அதைபொட்டி பாக்கம், புலிக்குறடு, தாதங்குப்பம் வரை சாலையே இல்லாமல் அப்பகுதி மக்கள் அவதிப்படுகிறார்கள். அதனால் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும்—நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊராட்சிச் சாலையே இல்லாமல் இருக்கக்கூடாது என்று ஆணையிட்டு செயல்படுத்தச் சொல்லி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்—இரண்டு பேரும் ஒருங்கிணைந்து அம்மாவுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று இச்சாலையை செய்து தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆர்வக்கோளாறு காரணமாக ஊராட்சி சாலையே இல்லாமல் இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். ஊராட்சிச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்ற வகையில் அதை திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

திருமதி என். கவிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி தேசிய நெடுஞ்சாலை என் 45-ல் கி.மீ.63/8-ல் பிரிந்து செல்லும் பாக்கம் சாலை கி.மீ. 0/0-லிருந்து 0.750 வரை மாவட்ட இதர சாலையாகும். புலிக்குறடு, தாதங்குப்பேட்டை வழையூர் சாலை, ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருப்பதால், நெடுஞ்சாலைத் துறை மூலம் இச்சாலையைச் செய்ய இயலாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி என். கவிதா சம்பத் அவர்கள்.

திருமதி என். கவிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி சாலைகளை கிராமத்து மக்களுக்கு மேம்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, மீண்டும் அந்தச் சாலையை அமைச்சர்கள் இருவரும் ஒருங்கிணைந்து அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை சாலையும் இணைந்துள்ளதால் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் அனுமதியுடனும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், மதுராந்தகம் தொகுதியில் அடங்கிய ஆத்தூர், அச்சரப்பாக்கம் பேரூராட்சி வழியாக வெள்ளைகுப்பட்டு, ஆனைம்பேடு, E.C.R. வரை புறவழிச்சாலை அமைத்துக் கொடுத்தால் வாகனங்கள் எளிதில் சென்னையை வந்தடையலாம். எனவே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நமது மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் புறவழிச்சாலை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களிடத்திலே தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கம் 57,943 கி.மீ. நீளமுள்ள சாலைகளை பராமரித்து வருகின்றது. இதற்குத் தேவையான நிதிதான் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைப்புச் சாலையை அமைத்துக்கொடுக்கும் பணி என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். நெடுஞ்சாலைத் துறையினரால் இயலாது என்பதை ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்ற காரணத்தால், அது நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டால்தான் இந்தத் துறையின் மூலமாக அந்தப் பணியை எடுத்துச் செய்ய இயலும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புறவழிச்சாலை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு போக்குவரத்து நெரிசலின் அடிப்படையிலேதான் புறவழிச்சாலைகள் அமைக்கின்ற பணி எடுத்துக்கொள்ளப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பகுதியிலே ஆய்வு செய்து போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. சோமசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மதுராந்தகம் பகுதியில் ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அந்தப் பகுதிகளில் பல்வேறு தொழிற்சாலைகளும், அடுக்குமாடிக்

கட்டடங்களும் இப்போது வந்திருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று அந்தச் சாலையை ஊராட்சி மூலமாக மேம்படுத்துவதற்கு வாய்ப்பு இருப்பின் மேம்படுத்தப்படும் அல்லது பெரிய தொழிற்சாலைகள் வந்திருக்கின்ற காரணத்தினால் பெரிய கனரக வாகனங்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை வரும்போது நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களோடு இணைந்து அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு உள்ளாட்சித் துறை அமைப்பும் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் விடிவெள்ளியான மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதிக்குட்பட்ட மேலமடைக்கு அருகில் உள்ள சென்னை-கன்னியாகுமரி நான்கு வழிச் சாலையிலிருந்து மதுரை டவுனுக்கு உள்ளே சென்று இறங்குவதற்காக உள்ள இணைப்புச் சாலை மிகவும் குறுகிய சாலையாக உள்ளது. அந்தச் சாலை சிவகங்கைக்குச் செல்லும் நெடுஞ்சாலையாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் மருத்துவமனைகள் அதிகம் இருப்பதால் ஆம்புலன்ஸ் வண்டிகள் அந்தச் சாலையில் செல்வதாலும், மதுரைவாழ் மக்களுக்கு அந்தச் சாலையினை விரிவுபடுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலையினை அகலப்படுத்தித் தர வேண்டும் என்று வினா தொடுத்திருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், போக்குவரத்துச் செறிவு அதிகம் இருக்கும்பட்சத்தில் அந்தச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 343, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

343—

பால் பதப்படுத்தும் தொழிற்சாலை

***14497—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் 17 கூட்டுறவு பால் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த பால் உற்பத்தி, நாள் ஒன்றுக்கு 19,735 லிட்டர். இச்சங்கங்களின்மூலம் உள்ளூர் விற்பனை நாள் ஒன்றுக்கு 15,343 லிட்டர் ஆகும். மேற்கண்ட சங்கங்களுக்கு ஒன்றியத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும் பால் 4,390 லிட்டர். இராஜபாளையம்